සියලු ම හිමිකම් ඇවිරිණි/All Right Reserved / முழுப் பதிப்புரிமையுடையது

# ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනය
# இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
# SRI LANKA INSTITUTE OF DEVELOPMENT ADMINISTRATION

**இலங்கை திட்டமிடல் சேவை உத்தியோகத்தர்களுக்கான**

**இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2020(I)**

| | | |
|---|---|---|
| காலம் - 03 மணித்தியாலங்கள் | தற்போதைய சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் மற்றும் அவற்றினால் இலங்கைப் பொருளாதாரத்திற்கு ஏற்படும் தாக்கம் (23) | විභාග අංකය Index No / சுட்டெண் .................................... |

- அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

---

1. இந்தியா மற்றும் சீனா ஒன்றுக்கொன்று போட்டித்தன்மையுடன் இந்து சமுத்திரத்தில் மேற்கொள்ளும் பொருளாதார மற்றும் அரசியல் நடவடிக்கைகளினால் இலங்கை மீது ஏற்படுகின்ற பாதிப்புக்கள் பற்றி விவாதிக்குக. (20 புள்ளிகள்)

2. இலங்கையின் பிரதான இருதரப்புக் கடன் வழங்குனரான சீனாவிடமிருந்து நிலையான கடன் நிவாரணம் பெறுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இலங்கையின் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைக்கும் செயற்பாடுகள் மந்தமடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. இந்த நிலைமை இலங்கையின் பொருளாதாரத்தை எவ்வாறு பாதிக்கின்றது என்பது பற்றிக் கலந்துரையாடுக. (20 புள்ளிகள்)

3. இரு நாடுகளுக்கிடையில் ஏற்படுத்தப்பட்டுள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை பகுப்பாய்வு செய்க. (20 புள்ளிகள்)

4. இலங்கைக்கு சொந்தமான வடகடலில் தென்னிந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதாக தொடர்ந்து குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இந்நிலையைத் தணித்து இலங்கையின் மீன்வளத்தைப் பாதுகாக்க நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்க. (20 புள்ளிகள்)

5. 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 3 ஆம் திகதி இலங்கையின் அபிவிருத்தி நிலைமை தொடர்பாக உலக வங்கியினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் பக்கம் 11 இல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"பலவீனமான உலகளாவிய பொருளாதார நடவடிக்கைகளுகளின் முன்னிலையில், 2023 ஆண்டு தொடர்பாக இலங்கையின் முக்கிய ஏற்றுமதிகளுக்கான தேவை குறையும் அதேவேளை அதிக வரிகள் மற்றும் குறைந்த வருமானத்தினால், உள்நாட்டுக் கேள்வியும் குறைவடையும். மேலும், நிரம்பல் சங்கிலி பிரச்சினைகள் மற்றும் சென்மதி நிலுவைப் பற்றாக்குறைக்கு மத்தியில் இலங்கைப் பொருளாதாரம் 2023 இல் 3.8 சதவீதத்தால் சுருங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது".

உலகப் பொருளாதார வீழ்ச்சிக்கு முகங்கொடுத்து இலங்கையின் பொருளாதாரத்தைப் பேணுவதற்கு ஏற்றுமதித் துறையில் எவ்வாறான உத்திகளைக் கையாள வேண்டும் என்பதை அலசி ஆராய்க. (20 புள்ளிகள்)

**************